# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.10 (LW 18 )

| பெயர் | கண்ணன் | தொழில் | |
|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | அழகர் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 13.06.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். போலீசர் அய்யனார் என்பவரை வழக்கு சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தனர். அய்யனாரை தெரியுமா என்று கேட்டார்கள் அய்யனாரை தெரியும் என்றேன். இவ்வழக்கில் நான் சாட்சியாக இருக்க வேண்டும் என்ற கேட்டுக்கொண்டார்கள். நானும் என்னுடன் பன்னீர் செல்வமும் சாட்சியாக இருந்தோம். அய்யனார் கொடுத்த வாக்குமூலத்தை ஆய்வாளர் படித்து காட்டினார் நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அதன் பின்னர் அய்யனார் என்பவரை வத்தலக்குண்டுவிற்கு அழைத்து சென்றனர். போலீசார் ஸ்கூட்டியை எடுத்துக்கொடுத்தார். Hero plus வண்டியை எடுத்துக்கொடுத்தனர். வத்தலகுண்டு சோனை ஓர்க் சப்பில் இருந்து எடுத்துக்கொடுத்தனர். நான் அதில் நானும் பன்னீர் செல்வமும் கையொப்பம் செய்தோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர், நான் கையொப்பம் செய்த அத்தாட்சி அ.சா.ஆ.3ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையம் சென்ற போது அய்யனார் அங்கு இருந்தார். காவல் நிலையத்தில் தான் நானும், பன்னீர் செல்வம் என்பவரும் கையொப்பம் செய்தோம். நானும் பன்னீர் செல்வமும் இறந்தவரின் ஊர் காரர்கள். இறந்தவரின் குடும்பத்தை பிறந்ததில் இருந்து அவர்களை தெரியும். இறந்ததில் இருந்து 15 நாட்களுக்கு உள்ளாக

காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தோம். அப்போது தான் பன்னீர் செல்வமும் கையொப்பம் செய்தார். ஓர்க் சாப் வத்தலகுண்டு காவல் நிலையத்தின் அருகில் தான் அது சுமார் 100 அடி தூரம் இருக்கும். அ.சா.ஆ.3 அத்தாட்சியில் உள்ள விபரங்கள் தெரியும். அத்தாட்சியில் போலீசார் கைப்பட எழுதினார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் போலீசார் எவரிடமும் வாக்குமூலம் பெறப்படவில்லை மேற்படி வாக்குமூலங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எதிரி கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அத்தாட்சியானது காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இறந்தவர் எனது ஊர்காரர் என்பதாலும் ,பல வருடம் பழக்கம் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி எந்த வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:19:18 +0530

Additional District Judge,

Dindigul.